**<u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.</u>**

**<u>O.S. No. 149 /2021 PW1</u>**

09.07.2025 **<u>வா.சா.1 சந்திரா சத்திய வாக்குமூலத்தின் பேரில் 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி -</u>**

1ம் பிரதிவாதி எனக்கு நிலத்தில் வந்த மகசூல் வருவாயை கொடுத்தார் என்றால் சரியல்ல. தவறான குடிப்பழக்கத்திற்கு 1ம் பிரதிவாதி ஆகிவிட்டார் என வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது திருமணம் ஆன காலத்தில் இருந்து எனக்கான அனைத்து தேவைகளையும் 1ம் பிரதிவாதி தான் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. எனக்கு நீரிழிவு நோய் மற்றும் செய்வினை காரணத்தால் உடல் நிலை பாதிக்கப்பட்டுள்ளது என எனது சாட்சியத்தில் தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு உடல் நிலை பாதிப்பு அடைந்தது முதல் 1ம் பிரதிவாதி தான் என்னை பராமரித்து வருகிறார் என்றால் சரியல்ல. எனது திருமணம் முடிந்து என் கணவரை விட்டு நான் பிரிந்த காலத்தில் இருந்து அவலூர்பேட்டையில் இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல கருமாரப்பட்டியில் இருந்து வருகிறேன். 1ம் பிரதிவாதி சங்கர் கொந்ததந்வாடியில் உள்ள நிலத்தில் இருந்து வருகிறார். நான் வசிக்கும் இடத்திற்கும், 1ம் பிரதிவாதி வசிக்கும் இடத்திற்கும் 2 கி.மீ தூரம் தான் இருக்கும். நான் பல ஆண்டுகள் கருமாரப்பட்டியில் இல்லாமல் எனது சகோதரர் வீட்டில் தான் வசிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது மகள் தற்போது என்னுடன் தான் வசிக்கிறார். அவருக்கு திருமணம் ஆகிவிட்டது. நான் தான் திருமணம் செய்து வைத்தேன். என் மகளின் திருமணத்தை 1ம் பிரதிவாதி தான் செய்து வைத்தார் என்றும், நான் தவறாக நான் செய்து வைத்ததாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, 1ம் பிரதிவாதி என் மகளின் திருமணத்திற்கே வரவில்லை. எனக்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தால் நான் என் நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது போல அவலூர்பேட்டையில் சிற்றுண்டி கடை நடத்தி வந்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியிடம் பணம் பறிக்க வேண்டும் என்ற நோக்கில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2010ல் நடந்த கிரையத்தை எனக்கு தெரியாது என்றும் தற்போது தான் தெரியவந்தது என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 27.04.2001 அன்று எனக்கு நன்றாக தெரிந்து தான் கிரையப் பத்திரத்தில் கையொழுத்து போட்டேன் என்றும், தற்போது வழக்கிற்காக அடமான ஆவணம் என்று நினைத்து தான் கையொப்பம் போட்டேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கிரையத் தொகை முழுவதும் வேறு ஒரு வழக்கின்

செலவிற்காகத்தான் செலவிடப்பட்டது என்றால் சரியல்ல. அந்த செலவு செய்யப்பட்ட வழக்கில் நானும் ஒரு முக்கிய குற்றவாளி என்றும், தற்போது வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 16.02.2007 அன்று எனக்கு கடன் கொடுப்பதற்காக சக்திவேலிடம் இருந்து 1ம் பிரதிவாதி அடமானத்தின் பேரில் பணம் பெற்றார் என்றும், நான் அந்த கடனை திருப்பி கொடுக்காததால் 10.02.2010 ல் மேற்படி கடனுக்காக அசல் மற்றும் வட்டியை 1ம் பிரதிவாதி பைசல் செய்தார் என்றால் சரியல்ல. 08.03.2011 அன்று 6ம் பிரதிவாதி மல்லிக்கு 2160 சதுரடி மனையை 1ம் பிரதிவாதி கிரையம் கொடுத்தார் என்றும், அந்த கிரையம் பற்றி எனக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. (வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
**திருவண்ணாமலை.**